# தேவகோட்டை நகராட்சி.
## சாதாரணக்கூட்டம்.

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 09.11.2023–ம் தேதிவியாழக்கிழமைகாலை 11.00 மணிக்கு சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**பொருள் – 405**

தேவகோட்டை நகராட்சியில்பொது நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 05.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவி ட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் –12, சுப்பிரமணியபுரம் தெருவில் பேவர் பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.50 | 1) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 0.05% குறைவு |
| | | | 2) திருமதி.G. சாந்தி, கோட்டையூர். | 0.76% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் –13, சரஸ்வதி வாசக சாலை 8–வது மற்றும் குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 | 1) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 0.03% குறைவு |
| | | | 2) திருமதி.G. சாந்தி, கோட்டையூர். | 0.66% அதிகம் |
| 3. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் – 27, அருணாச்சல பொய்கை கிழக்கு குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் கல்தளம் அமைத்தல் பணி | 9.00 | 1) திரு.R சரவணன், ஒப்பந்ததாரர், தேவகோட்டை. | 0.03% குறைவு |
| | | | 2) திரு.K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி. | 2.80% அதிகம் |

அலுவலக குறிப்பு: –
பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
**தீர்மானம் 405– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 406

தேவகோட்டை நகராட்சியில்பொது நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்–3, அண்ணாசாலை மற்றும் காமாட்சி அம்மன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல் பணி. | 9.90 | 1) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 0.11 % குறைவு |
| | | | 2) திருமதி. G. சாந்தி, கோட்டையூர். | 1.03 % அதிகம் |
| 2. | வார்டு எண்–20, வெள்ளையன் ஊரணி குளக்கால் பகுதியில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.90 | 1) திரு. K. பாலு, தேவகோட்டை. | 0.11 % குறைவு |
| | | | 2) திரு. M. அழகர்சாமி, தேவகோட்டை. | 0.26 % அதிகம் |

அலுவலக குறிப்பு: –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 406– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 407

தேவகோட்டை நகராட்சியில்குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் மராமத்து மற்றும் புதிய மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 9.90 | 1) ப்ரியா& கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி. | 0.09 % குறைவு |
| | | | 1) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 3.80 % அதிகம் |

அலுவலக குறிப்பு: –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 407– அனுமதிக்கப்பட்டது.**

––

**<u>பொருள் – 408</u>**

தேவகோட்டை நகராட்சியில்பொது நிதி 2023 – 2024-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 27.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, மாந்தோப்பு குறுக்குத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 | 1) ப்ரியா& கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி. | 0.07% குறைவு |
| | | | 2) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 2.76% அதிகம் |
| 2. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, மே.அரு மெயின் வீதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 | 1) திரு.G. விக்னேஷ் கண்ணா | 0.13% குறைவு |
| | | | 2) திரு.S. கணேசன் | 4.53% அதிகம் |
| 3. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, சிலம்பணி தெற்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 9.90 | 1) ப்ரியா& கோ, ஒப்பந்ததாரர், காரைக்குடி. | 0.12% குறைவு |
| | | | 2) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 2.50% அதிகம் |
| 4. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 சாமியாடி பெரிய கருப்பன் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 6.50 | 1) திரு.G. விக்னேஷ் கண்ணா | 0.03% குறைவு |
| | | | 2) திரு.S. கணேசன் | 3.22 % அதிகம் |
| 5. | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22, கட்ட முருகப்பன் சந்தில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 9.90 | 1) திருமதி.R செல்வி, ஒப்பந்ததாரர், காரைக்குடி. | 0.13% குறைவு |
| | | | 2) அண்ணாமலை & கோ, கோட்டையூர். | 2.60 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 408– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 409

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.396, நாள் 29.09.2023ன்படி நிலவேம்பு பொடி வாங்குவதற்கு விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருள் | விலை |
|---|---|---|---|
| 1. | SKM Siddha & Ayurvedha –Modakuruchi | நிலவேம்பு பொடி | ஒரு கிலோ ரூ.1410 /– |
| 2. | Chiruvagai Pharma –Madurai | நிலவேம்பு பொடி | ஒரு கிலோ ரூ.1450 /– |
| 3. | Herbo Sidh Lifecare –Dindugal | நிலவேம்பு பொடி | ஒரு கிலோ ரூ.1375 /– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் மிக குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Herbo Sidh Lifecare –Dindugal நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.ந.க.எண்.01763/2023/எச்1

**தீர்மானம் 409– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 410

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் 29 துாய்மை பணியாளர்களில் ஆண்கள் –17, பெண்கள் –11, பணிபுரிந்து வருகின்றனர், துாய்மை பணியாளர்களுக்கு 2023–2024 ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் தையல் கூலி வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.65,000/– செலவினம் மேற்கொள்ளவும், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் சீருடைகள் வாங்கவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.ந.க.எண்.3938/2008/எச்1.

**தீர்மானம் 410 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 411

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் 29 துாய்மை பணியாளர்களுக்கு 2023–2024ம், ஆண்டிற்கான வழங்கப்பட வேண்டிய குளியல் சோப்புகள் மாதம் ஒன்றுக்கு ஒன்று வீதம் 12 மாதங்களுக்கு 12 வீதம் 29 பணியாளர்களுக்கு 348 சோப்புகள் மற்றும் 29 பணியாளர்களுக்கு ஒரு ஜோடி காலனி வீதம் 29 ஜோடி காலனிகள் (ஆண்கள் –18, பெண்கள் –11) அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாங்க உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1284/2008/எச்1.
**தீர்மானம் 411– அனுமதிக்கப்பட்டது.**

--

## பொருள் – 412

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், டெங்கு நோயை ஏற்படுத்தும், ஏடிஎஸ் கொசு மற்றும் பிற வகை முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு தெருக்கள் மற்றும் வீட்டின் வெளிபுரங்களில் புகைமருந்து தெளிப்பதற்கு, இந்நகராட்சியில் Outdoor Fogging Mechine -3 எண்ணம், மற்றும் Vechile Mounted Fogging Mechine -1 எண்ணம்உள்ளது. தற்போது பருவமழை தொடங்கி விட்டதால், டெங்கு காய்ச்சல், அதிகமாக இருப்பதால், வீட்டின் உட்புரங்களில் புகை மருந்து தெளிப்பதற்கு, Indoor Fogging Mechine 6 எண்ணம் வாங்கவும், அதற்கான எரிவாயு சிலிண்டர் 100 எண்ணம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1983/2023/எச்1,
**தீர்மானம் 412– அனுமதிக்கப்பட்டது.**

--

## பொருள் – 413

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 30.09.2023–ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி 45 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற 31.10.2023 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் அனைத்து 45 DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் ஒரு மாத காலம் 01.11.2023 முதல் 30.11.2023 வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/– த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–
அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.
<u>ந.க.எண்.1769/2016/எச்1,</u>
**தீர்மானம் 413– அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 414</u>

நகராடசி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.3955/2022/03, நாள்–15.09.2023ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள உத்தரவின்படி மண்டல இயக்குநர், மதுரைஅலுவலக பயன்பாட்டில் உள்ள Canon image Runner 2520W ஜெராக்ஸ் மெஷினிற்கு இரண்டு எண்ணம் டோனர் விநியோம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இரண்டு எண்ணம் டோனர் கொள்முதல் செய்திட செலவீனம் ரூ.12,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 03.10.2023–ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 414 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 415</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெராக்ஸ் மெஷின் ஒன்றுக்கு இரண்டு டோனர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்பட்டியல் |
|---|---|---|
| 1 | சாஸ்தா கம்பியூட்டர்ஸ் Canon NPG 51 Toner - 2 | ரூ.12001/– |
| 2 | ஆக்டிங் பிரிண்டர்ஸ், Canon NPG 51 Toner - 2 | ரூ.13800/– |
| 3 | LAP Solution, Canon NPG 51 Toner - 2 | ரூ.14800/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துளள சாஸ்தா கம்பியூட்டர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
<u>அலுவலக குறிப்பு: –</u>
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 03.10.2023–ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 415– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 416

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.A, பிளாக் எண். 17, நகரளவு எண்கள் 130, 131–ல் உள்ள பரப்பளவில் 4552.50 சதுரமீட்டர் கொண்ட இடத்தை 21 குடியிருப்பு மனை பிரிவுகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் சாலைகள் அமைக்க 1031.68 சதுரமீட்டர் இடமும் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கு 19.75 சதுரமீட்டர் மற்றும் மின்வாரியம் உபயோகத்திற்கு 38.19 சதுரமீட்டர் இடமும் இந்நகராட்சிக்கு பத்திர பதிவுத்துறை மூலமாக 18.05.2023ம் தேதிய பதிவு ஆவண எண்.2318/2023–ல் தானமாக பதிந்து தேவகோட்டை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 416– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 417

தேவகோட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022 – 2023 ஊரணிகள் மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பெருமா கண்மாயினை தூர்வாரி சுத்தம் செய்தல் பணி மற்றும் ஊரணியை சுற்றி நடைபாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஊரணி அருகே நீண்ட காலமாக அப்பகுதி பொதுமக்களால் குப்பைகள் மற்றும் கழிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக கொட்டப்பட்டு பெரும் குவியலாக காணப்படுகிறது. குப்பை மற்றும் மண் சேர்ந்து சுமார் 4000 கமீ உள்ளது. தற்போது ஊரணி உள்ளே இருப்பதால் அதனை வெளியே எடுத்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேலும் மேற்காணும் பணி திட்டப்பணியாக இருப்பதால் விரைவாக முடிக்கும் பொருட்டு ஊரணி உள்ளே உள்ள குப்பை மற்றும் மண்னை அள்ளி அப்புறப்படுத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 417– அனுமதிக்கப்பட்டது.**

––

(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்
நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகராட்சி.

/உண்மை நகல் /

மேலாளர்,
தேவகோட்டை நகராட்சி